# திருவண்ணாமலை ஸ்தலபுராண சுருக்கம்

## ஸ்ரீ அபீதகுசாம்பாள்

## ஸ்ரீ அருணாசலேஸ்வரர் அஷ்டோத்ரம், திருப்பல்லாண்டு.

ஸ்வாமி ஸச்சிதானந்த ஸரஸ்வதி
புரவி மண்டபம்,
ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயம்.
திருவண்ணாமலை.

8 முக்ய த்யான புஸ்தகங்கள் ரூபாய் ஒன்று
செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

1959 டிசம்பர் 3உ முதல் 13உ வரையில்

12 nP.

உ

# திருவண்ணுமலை
# க்ஷேத்ர மஹாத்மியம்

ஸ்ரீ அருணுசலம் என்ருல் ஸ்ரீ—திரு. அருணு—அண்ணு, அசலம்—மலை. இது தென்னுட்டிலுள்ள 22 சிவஸ்தலங்களில் முக்கியமானது. ஸ்ருஷ்டிக்கு ஆதாரமான மண், ஜலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கிற ஐந்து பூதங்களுக்கும் ஐந்து க்ஷேத்திரங்களும் சிவலிங்கமும் உண்டு. அந்த ஐந்தில் திருவண்ணுமலை அக்னி சம்பந்தமானது. இவ்விடம் ஈஸ்வரியின் திருநாமம் அபீத குசாம்பாள், ஸ்வாமியின் பெயர் ஸ்ரீ அருணுசலேச்வரர்.

ஸ்ரீதேவி சாமான்யமாக சிவனுடைய இடது பாகம் ஆக்ரமித்திருப்பது பிரசித்தம். வலது பாகம் சிவாத்மகமாகி பகல் வேளையில் பக்தர்களுக்கு ஞான வைராக்கிய சாதனங்களை உண்டு பண்ணும். இடது பாகமான சக்தி தத்வம் இரவு காலத்தில் பிர

பலமாகி பக்தர்களுக்குப் புக்தி முக்தி மாங் கல்யங்கள் பிரசாதிக்கும். இவ்விடத்தில் மாத்திரம் தேவி சிவனுடைய வலம் இடம் இரு பக்கங்களிலும் இருந்து பகல் இரவு, சிவம் சக்தி, தத்துவ பேதங்கள் இன்றி ஸதா பக்தர்களுக்கு புக்தி முக்தி, ஞான வைராக்கிய மாங்கல்யங்களை நினைத்த மாத் திரத்தில் உண்டு பண்ணும் இது இந்த க்ஷேத்திரத்தின் தனி சிறப்பு.

அண்ணுமலையைச் சிவ சக்தி மயமான தேஜஸாகப் பாவிக்க வேண்டியது. எப்படி யென்ருல், முன் ஒரு காலத்தில் பிரும்மா விஷ்ணு இருவரும் அவரவர் தாமே பெரிய வர் என்று சண்டையிட, பரமேஸ்வரன் பூர்ண சக்தி ஸ்வருபமான மஹாமூர்த்தி யாய், தரிசனம் கொடுத்து, ஹே புண்ணியர் களே, சண்டை வேண்டாம். மலையாக இருக்கிற என்னுடைய அடியையும் முடியை யும் தெரிந்து வருபவரே பெரியவர் என் றும், ஒருவர் அடியை நோக்கியும் மற்ருெருவர் முடியை நோக்கியும் செல்லக்கடவீர் என்றும் ஆக்ஞாபித்தனர்.

விஷ்ணு வராக ரூபமெடுத்து பூமியை நோண்டி நோண்டி வெகுதூரம் சென்று சிரமப்பட்டு அடியைப் பார்க்க முடியாமல் திரும்பி வந்து சிவனை ஸ்தோத்திரம் செய்து, தங்களுடைய பாதமூலம் அறிய அசக்தனாக இருப்பதாக வணங்கி நின்றார். பிரும்மன் அன்னப்பட்சி ரூபத்தில் மேல் நோக்கி சென்று முடி தெரியாமலே திரும்பி வந்தும், பார்த்ததாகப் பொய் சொன்னார். அதற்கு தாழம்பூ பொய் சாட்சியும் சொல்லி வைத்தார்.

சர்வக்ஞனான சிவன் சிரித்து, அரி அரர்களே! பெரியவராக இருப்பதற்கு தேகபலம் ஐஸ்வர்யம் இவைகள் காரணம் அல்ல. சீலம்தான் பெருமையை உண்டு பண்ணுவது. சீலத்திற்கு, பல ஐஸ்வர்யங்கள் மிகவும் தாழ்ந்தது. சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு கர்த்தர்களான நாம் மூவரும் லோகங்களில் வணங்கத் தக்கவர்களாய் இருக்கிறோம். அப்படி எற்பட்ட நமக்கு சீலம் தான் பிரதானம். அப்படியிருந்தும் பிரும்மன் பொய் சொல்லி தன்னுடைய சீலத்

திற்கு களங்கம் கொண்டு வந்தான். விஷ்ணு தன்னுடைய அசத்தியை தானே ஒப்புக் கொண்டு ஸத்தியவாதி என்று பெருமை வாங்கினான்.

என்னுடைய அடிமுடி பார்க்க முடியாமல் இருப்பது உங்களுக்கு குறைவு இல்லை. ஏனெனில், நான் லய காலனான உக்கிர மூர்த்தி அதிலும் இந்த க்ஷேத்திரத்தில் தேஜோரூபமாக ஆவிர்பவித் திருப்பதால் என்னை பார்ப்பது யாவருக்கும் அசாத்தியம். சீலம் கெடாத விஷ்ணு எனக்கு சமானமாகவும் அபேதமாகவும் இருப்பான். சீலம் குறைந்த பிரும்மன் எங்களுக்கு சமமாக இல்லாமல் சுரஜ்யேஷ்டன் என்ற கௌரவ பதத்தில் இருந்து எங்கள் இருவரையும் பூஜித்து வரவேண்டியவனாக இருப்பான். பொய் சொன்ன தாழம்பூ இனி என் பூஜைக்கு அர்ஹமல்ல என்றும் சொல்லி இருவரையும் அவரவர் லோகங்களுக்கு அனுப்பிவிட்டார். இது ஸ்ரீ அருணசல மஹாத்மியத்திய வரலாறு.

சுபம்.

உ

ஸத் குரு ஸேவா ஜயதி

# ஸ்ரீ அபீத குசாம்பா அஷ்டோத்தர
# சத நாமாவளி

ஓம் மஹா கௌரியை நம:
,, மஹா தேவ்யை நம:
,, ஜகன்மாத்ரே நம:
,, ஸரஸ்வத்யை நம:
,, சண்டிகாயை நம: 5

,, லோகஜனன்யை நம:
,, ஸர்வ தேவாதி தேவதாயை நம:
,, பார்வத்யை நம:
,, பரமாயை நம:
,, ஈஸாயை நம: 10

,, நகேந்த்ர தனயாயை நம:
,, ஸத்யை நம:
,, ப்ரும்மசாரிண்யை நம:
,, ஸர்வாண்யை நம:
,, தேவமாத்ரே நம: 15

ஓம் திரிலோசன்யை நம:

,, ப்ரும்மாண்யை நம:

,, வைஷ்ணவ்யை நம:

,, ரௌத்ரியை நம:

,, காளராத்ரியை 20

,, தபஸ்வின்யை நம:

,, சிவதூத்யை நம:

,, விஸாலாக்ஷ்யை நம:

,, சாமுண்டாயை நம:

,, விஷ்ணு சோதர்யை நம: 25

,, சித்கலாயை நம:

,, சின்மயா காராயை நம:

,, மஹிஷாஸுர மர்த்தன்யை நம:

,, காத்யாயன்யை நம:

,, காலரூபாயை நம: 30

,, கிரிஜாயை நம:

,, மேனகாத்மஜாயை நம:

,, பவான்யை நம:

,, மாத்ருகாயை நம:

,, கௌர்யை நம: 35

ஓம் ரமாயை நம:
,, ராமாயை நம:
,, ஸுசிஸ்மிதாயை நம:
,, ப்ரும்மஸ்வரூபிண்யை நம:
,, ராஜ்யலக்ஷ்ம்யை நம: 40

,, ஶிவப்ரியாயை நம:
,, நாராயண்யை நம:
,, மஹாஸக்த்யை நம:
,, நவோடாயை நம:
,, பாக்யதாயின்யை நம: 45

,, அன்னபூர்ணாயை நம:
,, ஸதானந்தாயை நம:
,, யௌவநாயை நம:
,, மோஹின்யை நம:
,, ஞானஸுத்யை நம: 50

,, ஞானகம்யாயை நம:
,, நித்யாயை நம:
,, நித்ய ஸ்வரூபிண்யை நம:
,, கமலாயை நம:
,, கமலா காராயை நம: 55

ஓம் ரக்தவர்ணாயை நம:
,, களாநிதயே நம:
,, மதுப்ரியாயை நம:
,, கல்யாண்யை நம:
,, கருணாயை நம: 60

,, ஜனஸ்தானாயை நம:
,, வீரபத்னியை நம:
,, விரூபாக்ஷ்யை நம:
,, விராதிதாயை நம: 65

,, ஹேமாபாயை நம:
,, ஸ்ருஷ்டி ரூபாயை நம:
,, ரஞ்சனாயை நம:
,, யௌவனாகரராயை நம:
,, பரமேஸப்ரியாயை நம: 70

,, பராயை நம:
,, புஷ்பிண்யை நம:
,, புருஷாகாராயை நம:
,, புருஷார்த்த ப்ரதாயின்யை நம:
,, மஹா ரூபாயை நம: 75

ஓம் மஹா ரௌத்ரியை நம:
,, காமாக்ஷ்யை நம:
,, வாமதேவ்யை நம:
,, வரதாயை நம;
,, பயநாஸின்யை நம: 80

,, வாக்தேவ்யை நம:
,, வசஸ்யை நம:
,, வாராஹ்யை நம:
,, விஸ்வதோஹின்யை நம:
,, வர்ணனீயாயை நம: 85

,, விஸாலாக்ஷாயை நம:
,, குலசம்பத் ப்ரதாயின்யை நம:
,, ஆர்த்த துக்கச் சேத தக்ஷாயை நம:
,, அம்பாயை நம:
,, நிகில யோகின்யை நம: 90

,, ஸதா புரஸ்தாயின்யை நம:
,, தரோர்மூல தலங்கதாயை நம:
,, ஹரவாஹ ஸமாயுக்த முனிமோக்ஷ
[பராயணாயை நம:
,, தராதர பவாயை நம:
,, முக்தாயை நம: 95

ஓம் பரமந்த்ராயை நம :
,, வரப்ரதாயை நம :
,, கல்யாயை நம :
,, வாக்பவ்யை நம :
,, தேவ்யை நம : 100

,, க்லீங்காரிண்யை நம :
,, ஸம்விதே நம :
ஈஸ்வர்யை நம :
,, ஹ்ரீங்கார பிஜாயை நம :
,, ஸாம்பவ்யை நம : 105

,, ப்ரணவாத்மிகாயை நம :
,, ஸ்ரீ மஹா கௌர்யை
,, ஸ்ரீமத் ஆபீத குசாம்பாயை நம : 108

ஸம்பூர்ணம்.

---

ந—நமனைத் தாண்டு
ம—மஹேசனை நாடு
சி—சிதாகாயம் பார்
வ—வாயு (பிராணனை) வைச் சேர்
ய—யதிகனை வணங்கு

ஸ்ரீரஸ்து

# ஸ்ரீ சிவாஷ்டோத்தர
# ஸத நாமாவளி

---

ஓம் சிவாய நம:
,, மஹேஸ்வராய நம:
,, ஸம்பவே நம:
,, பினாகிநே நம:
,, ஸஸிஸேகராய நம: 5

,, வாமதேவாய நம:
,, விரூபாக்ஷாய நம:
,, கபர்த்தினே நம:
,, நீலலோஹிதாய நம:
,, சங்கராய நம: 10

,, ஸூலபாணயே நம:
,, கட்வாங்கிநே நம:
,, விஷ்ணுவல்லபாய நம:
,, ஸிபிவிஷ்டாய நம:
,, அம்பிகானாதாய நம: 15

ஓம் ஸ்ரீகண்டாய நம:
,, பக்தவத்ஸலாய நம:
,, பவாய நம:
,, ஸர்வாய நம:
,, த்ரிலோகேஸாய நம: 20

,, ஸிதிகண்டாய நம:
,, சிவாப்ரியாய நம:
,, உக்ராய நம:
,, கபாலிநே நம:
,, காமாரயே நம: 25

,, அந்தகாஸுர ஸூதநாய நம:
,, கங்கா தராய நம:
,, லலாடாக்ஷாய நம:
,, காலகாலாய நம:
,, க்ருபாநிதே நம: 30

,, பீமாய நம:
,, பரஸுஹஸ்தாய நம:
,, ம்ருகபாணயே நம:
,, ஜடாதராய நம:
,, கைலாஸவாஸிநே நம: 35

ஓம் கவசிநே நம:
,, கடோராய நம:
,, த்ரிபுராந்தகாய நம:
,, வ்ருஷாங்காய நம:
,, வ்ருஷபாரூடாய நம:

,, பஸ்மோத்தூளித விக்ரஹாய நம:
,, ஸாமப்ரியாய நம:
,, ஸ்வரமயாய நம:
,, த்ரயீமூர்த்தயே நம:
,, அநீஸ்வராய நம: 45

,, ஸர்வஞ்ஞாய நம:
,, பரமாத்மநே நம:
,, ஸோமஸூர்யாக்நி லோசனாய நம:
,, ஹவிஷே நம:
,, யஜ்ஞமயாய நம: 50

,, ஸோமாய நம:
,, பஞ்சவக்த்ராய நம:
,, ஸதா சிவாய நம:
,, விஸ்வேஸ்வராய நம:
,, வீரபத்ராய நம; 55

ஓம் கணநாதாய நம:
,, ப்ரஜாபதயே நம:
,, ஹிரண்ய ரேதஸே நம:
,, துர்தர்ஷாய நம:
,, கிரீஸாய நம: 60

,, கிரிஸாய நம:
,, அனகாய நம:
,, புஜங்கபூஷணாய நம:
,, பர்க்காய நம:
,, கிரிதன்வநே நம: 65

,, கிரிப்ரியாய நம:
,, க்ருத்திவாஸஸே நம:
,, புராராதயே நம:
,, பகவதே நம:
,, ப்ரமதாதிபாய நம: 70

,, ம்ருத்யுஞ்ஜயாய நம:
,, ஸூக்ஷ்மதனவே நம:
,, ஜகத்வ்யாபினே நம:
,, ஜகத்குரவே நம:
,, வ்யோமகேஸாய நம: 75

ஓம் மஹாஸேநஜனகாய் நம :
,, சாருவிக்ரமாய நம :
,, ருத்ராய நம :
,, பூதபதயே நம
,, ஸ்தாணவே நம : 80

,, அஹிர்புத்ந்யாய நம :
,, திகம்பராய நம :
,, அஷ்டமூர்த்தயே நம :
,, அநேகாத்மநே நம :
,, சாத்விகாய நம : 85

,, சுத்தவிக்ரஹாய நம :
,, சரஸ்வதாய நம :
,, கண்டபரசவே நம :
,, அஜாய நம :
,, பாசவிமோசகாய நம : 90

,, ம்ருடாய நம :
,, பசுபதயே நம :
,, தேவாய நம :
,, மஹாதேவாய நம :
,, அவ்யயாய நம : 95

ஓம் ஹரயே நம:
,, பூஷதந்தபிதே நம:
,, அவ்யக்ராய நம:
,, தக்ஷாத்வரஹராய நம:
,, ஹராய நம: 100

,, பகநேத்ரபிதே நம:
,, அவ்யக்தாய நம:
,, ஸஹஸ்ராக்ஷாய நம:
,, ஸஹஸ்ரபதே நம:
,, அபவர்க்கப்ர தாய நம: 105

,, அனந்தாய நம:
,, தாரகாய நம:
,, பரமேஸ்வராய நம:
ஸ்ரீ அருணாசலேஸ்வராய நம:

இதி ஸ்ரீசிவாஷ்டோத்தர சர நாமாவளி
ஸமாப்தம்.

---

சிவஸ்வரூபம் ஏகம் - நித்யம். சுத்தம்
ஸர்வாதாரம் - ஸச்சிதானந்தம்.

# ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஸ்ரீ வல்லாள மஹாராஜாவிற்கு

வருஷாந்திர பிதுர்யக்ஞம் நடத்துவதின்

## வ ர லா று

---

வல்லாள மஹாராஜா சந்தானமில்லாமல் பரிதபித்துக் கொண்டு ஸ்ரீ அருணாசலேஸ்வரரைக் குறித்து தவம் இருந்தார். ஸ்வாமி தபஸுக்கு சந்தோஷித்து அவருடைய பக்தியை உலகத்தாருக்கு அறிவிக்கும் நிமித்தம் யோகி உருவத்தில் சந்தித்து, அரசனே! நான் காம வேதனையினால் மிகவும் கலக்கமடைந்திருக்கிறேன். ஒரு ஸ்திரி எனக்கு கிடைக்காது போனால் இரண்டு நாட்களில் நான் மரணமடைவேன். உன்னுடைய சகாயத்தை விரும்பி வந்தேன் என்று சொன்னார்

வல்லாள மஹாராஜா யோகியின் கருத்துக்கு இசைந்து உங்களுக்கு இந்த உத

வியை செய்ய கடமைப்பட்டிருப்பதாக பதிலளித்தார்.

ராஜா தன்னுடைய மந்திரியை அனுப்பி தாசிக்காக தேடி அலைந்தும், தானே பிரயத்தனப்பட்டும் பார்த்தார். சிவ மாயையால் அவர்களுக்கு எங்கும் ஒரு தாசியும் கிடைக்கவில்லை. ராஜா தன்னுடைய வாக்கை எவ்விதத்தில் நிறைவேற்றுவது என்று கவலைப்பட்டு முடிவில் தன்னுடைய மனைவியை அழைத்து, பாமினி! நீ சீலவதி! அதிலும் பதிவிரதை! என்றைக்கும் என்னுடைய ஆக்ஞையை மீறவில்லை. நாம் க்ஷத்திரியர்களும் சிறந்த கிரஹஸ்தர்களுமாக இருக்கிறோம். நாம் சொல் தவரக் கூடாது. அதிதிகளை எவ்விசத்திலும் ஆதரிக்க கடமைப் பட்டிருக்கிறோம். இந்த யோகி இன்று நம்முடைய அதிதி. அவர் கேட்டதை நான் ஏற்கனவே கொடுப்பதாக வாக்கு கொடுத்துவிட்டேன். ஆனால் அதை நிறைவேற்றுவது முடியாமல் இருக்கிறது. நாம் எப்படி தர்மம் தவராமல் இருப்பது.

'பரோபகாரம் இதம் சரீரம்' என்கிற மேலோர் வாக்கியம் உனக்கு தெரிந்ததே. நீ எனக்கு தர்மானுஷ்டான விஷயத்தில் உதவ வேண்டியது பாதி சரீரமாக அமைந் திருக்கிருய். பரோபகார புத்தியில் உன் னுடைய சரீரத்தை என் ஆக்ஞையின்படி முனிவருக்கு அர்ப்பணம் செய்து என்னு டைய வாக்கை பிரதிக்ஞா பரிபாலனம் செய்ய வேண்டியது என்று முனிவரிடம் அனுப்பிவைத்தார். ராணியும் கணவர் சொல்படி முனிவரிடம் சென்று ஓர் புர மாக நின்றுக் கொண்டிருந்தாள். முனிவர் யோக நிஷ்டையிலிருந்து ப்ராம்ஹி முகூர்த் தம் வந்தும் கண் திறக்கவில்லை. அதன் பேரில் வல்லமா தேவி தான் வந்திருக்கும் சமாசாரம் முனிவருக்கு தெரிய வேண்டிய தற்காக அவரை தொட்டு விழிக்கச் செய் தாள். மஹா பதிவிரதையான வல்லமா தேவியின் கைபட்ட விசேஷத்தினுல் யோகி யாக வந்த சிவம் குழந்தையாக மாறி குவா குவா என்று கத்த ஆரம்பித்தார்.

குழந்தையினுடைய மூன்றுவது ஞானக் கண் பிரகாசமும் பாதத்தில் திரிசூலம் பத்மம் முதலான தெய்வ சின்னங்களான ரேகைகள் வல்லமா தேவிக்கு தென்பட்டது. இது சிவ மஹாத்மியம் என்றும் தங்களுடைய தபசின் பயனுக சாட்சாத் பரமசிவமே தங்களுக்கு குழந்தையாக நினைத்து யோகி வேஷத்தில்வந்து இவ்வித மாக சோதித்தார் என்று தெளிவுபெற்று சந்தோஷத்துடன் குழந்தையை கையில் எடுத்துக் கொண்டு பர்த்தாவிடம் சென்று நடந்த விஷயங்களை தெரிவித்தாள். அந்த குழந்தையே பெரியவனுகி அரசாண்டு பின் மூல லிங்கத்தில் ஐக்கியமாய் லோகத்தில் எல்லோரும் பிதிர்யக்ஞம் செய்வதற்காக அவரே பிரதி வருஷமும் பிதிர்யக்ஞம் செய்துக் காட்டுகிருர்.

இது ஸ்ரீ அருணுசல மஹாத்மியத்தில் முக்கியமான இரண்டாவது அம்சம்.

இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அருணகிரி நாதர், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், குகை நமசிவாயர்,

குரு நமசிவாயர், வஜ்ராங்கத பாண்டியன், பிரபுடதேமர், சப்தகன்னிகள், வல்லாள மஹாராஜா முதலிய அநேக மஹாத்மாக்கள் தபஸ்செய்து சித்தியடைந்திருக்கிறார்கள், குதிரை புனுகு பூனை முதலான ஜந்துக்களும் தபஸ் செய்து சித்தி யடைந்திருக்கின்றன.

ஸ்ரீ அருணகிரி நாதர் இந்த ஆலயம் 16 கால் மண்டபத்தில் ஸ்ரீ முருகபிரானை தரிசித்து அனுக்கிரஹம்பெற்று திருப்புகழ் அனுபூதி பாடினார். குரு நமச்சிவாயர், குகை நமச்சிவாயா இவ்விடத்தில் ஸ்ரீ பரமேஸ்வர கிருபையால் ஞானம் பாலித்து வருகிறார்கள். அவர்களுடைய ஆலயம் பெரிய கோவிலுக்கு மேற்புறத்தில் கால் மைல் தூரத்தில் இருக்கிறது. சமீபகாலத்தில் ஸ்ரீ ரமணர் தபஸ் செய்து மஹரிஷியாகி உலகத்தில் ஹிந்து சித்தாந்தத்தை ஐரோப்பா முதலான இதர கண்டங்களிலும் பரவச்செய்து ஸித்தி யடைந்திருக்கிறார். அவருடைய ஆஸ்ரமம் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது.

கார்த்திகை பௌர்ணமியில் இந்த மலையில் தீபக் காட்சி மிக சிறப்பானது. வேறு எங்கும் அப்படி காண முடியாது. இங்குள்ள 350 தீர்த்தங்களில் பரம்ம தீர்த்தம் சிவகங்கை தீர்த்தம் இந்த்ர தீர்த்தம் முலைப் பால் தீர்த்தம் இவைகள் முக்கியமானது.

கார்த்திகை தீப உற்சவத்திற்கு மதரூஸ் சங்கர ஸத்குரு ஸேவாஸ்ரம ஞானசிரியர் ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமி பக்திபூர்வகமான த்யான புஸ்தகங்கள் கொண்டு வந்து புரவி மண்டபத்தில் தங்கி விநியோகம் செய்து வருகிறார். பக்தர்கள் சகஜமாக கிரிபிரதட்சிணம் செய்து மகிழ்விருட்சத்தை தரிசித்து ஸ்ரீ சச்சிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமியிடம் யாத்ரா அடையாளமாக த்யான புஸ்தகம் வாங்கி அனுஷ்டானம் செய்வது பழக்கமாக வந்து கொண்டிருக்கிறது.

ஸர்வே ஜனா: சுகினோபவந்து
ஸமஸ்த ஸந் மங்களாணி சந்து

சுபம்

ஸத்குருஸேவா ஜயதி

(சேந்தனார்)

# திருப்பல்லாண்டு

---

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் ம்ண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ
னடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே,

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்கு-ஆள் செய்மின் குழாம்புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும்இன்றும் என்றும உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே,

ட்டை யிலாவுடல் நீத்துஎன்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்சீர்
ஆட்டும் திறங்களு மேசிந்தித்து
அட்ட மூர்த்திக்கு என்அகம்
நெகஊறும் அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத்தன் பற்படுத்தா
னுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப் பொருள்சோ
தித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரண்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்து அழைப்பஎன் உயிராண்ட
கோவினுக்கு என்செய வல்லமென்றும்

கரந்தும் கரவாத கற்பகன்
ஆகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே,

சேவிக்க வந்துஅயன் இந்திரன்
செங்கண்மால் எங்கும் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாம்குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதை என்னார்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெருத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார்உலகில்
ஊரும்உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

சேலும் கயலும் திளேக்கும்
கண்ணூர் இளம் கொங்கையில்
[செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கும்
என்று புண்ணியர் போற்று இசைப்ப
மாலும் அயனும் அறியா
நெறிதந்து வந்துஎன் மனத்தகத்தே
பாலும் அமிதமும் ஒத்துநின்
ருனுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே,

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் வண்டத்தொ டும்உடனே
பூதலத் தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமும் அருளிச்

சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப்பரிசு வைத்தா
னுக்கே பல்லாண்டு கூறுதுமே,

குழலொளி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழாவொலி வீண்ணளவுஞ்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடியெம்
மானுக்கே பால்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத் துநிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

எந்தை எந்தாய் சுற்றுமுற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடிநா யினேன் செப்புமுறை
அந்தமில் ஆனந்தச் சேந்தனெனைப்
புகுந்து ஆண்டு கொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட
[வர்செவிகள்
வாழி யவனே வணங்கும் முடிச்சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்.

ஸ்வாமி சச்சிதாநந்த ஸரஸ்வதி.

ஸ்ரீசங்கர ஸத்குரு ஸேவாஸ்ரமம்

சிதம்பரம்

## குருநமச்சிவாயதேவர் அருளிச்செய்த

# நமச்சிவாயமாலை

மந்திர நமச்சிவாய மாலைநான் செப்புதற்குக்
கந்தவே டனுக்குமூத்த கணபதி காப்புத்தானே.

அறைமறை யயனுமாலும் அமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கியேத்தும் முதல்வனே நமச்சிவாய. 1

ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியாவண்ணஞ்
சோதியாய் நிறைவாய்நின்ற துணைவனே நமச்சிவாய. 2

இணையடி தேடிக்காணு ஏழுல களந்தமாயன்
கணையதா வெயின்மூன்றெய்த கடவுளே நமச்சிவாய. 3

ஈட்டியபொருள் போலுன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன்மேனி வள்ளலே நமச்சிவாய. 4

உமையொரு பாகம்வைத்த உம்பர்க டம்பிரானே
அமைதரு மணியேமுத்தே அண்ணலே நமச்சிவாய. 5

ஊனுமா யுயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
தாணுவாய்ச் சகத்துக் கெல்லாந் தந்தையா நமச்சிவாய. 6

எழுபிறப் பதனுன் மாழ்கும் என்னுயிர்க் கிரங்கிவந்து
பழுதற வாண்டு கொள்ளும் பரமனே நமச்சிவாய. 7

ஏடவிழ் கோதைமாதர் இளமுலை மயக்கப்பட்டு
நீடுதலொழிக்கவல்ல நிமலனே நமச்சிவாய. 8

ஐயமேற் றுண்டாய்பாதம் அன்பிலேன் றலைமேல்வைத்த
செய்யனே வானோர்போற்றுந் தேவனே நமச்சிவாய. 9

ஒன்பது வாயிற்கூட்டில் ஒடுங்குயி ருய்யும்வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாய. 10

ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணைநல்கும் வள்ளலே நமச்சிவாய. 11

ஔவியம்பேசாவண்ணம் அடிமையைத்தடுத்தாட்கொள்ளுந்
திவ்விய மணியேமுத்தே தேவனே நமச்சிவாய. 12

அக்கினைப் பூண்டுகொண்டே அரியவெண் ணீறுபூசுஞ்
சொக்கனே சொக்கர்மேனித் தூயனே நமச்சிவாய. 13

கம்பமார் களிறுரித்த கச்சியே கம்பாசெம்பொன்
அம்பலத் தாடுகின்ற அண்ணலே நமச்சிவாய 14

நகரம்போல் வளைந்துமன்று நாயினே னுணவுதேடும்
பகரொணு வின்னர்தீர்க்கும் பரமனே நமச்சிவாய. 15

சத்தியுஞ் சிவமுமாகித் தாணுவாய் சகத்துக்கெல்லா
முத்தியே யளிப்பாயாதி முதல்வனே நமச்சிவாய. 16

ஞமனுட னிந்திரர்க்கும் நாரணற் காரணற்குஞ்
சமனுற முதலாய்நின்ற தாணுவே நமச்சிவாய. 17

இடவிய கபாலமேந்தி எழிரண் டுலகமெல்லாந்
தடவியுங் காணவொண்ணுச் சங்கரா நமச்சிவாய. 18

இனங்கிய கமலப்பொற்ருள் இருவரு மேந்திநின்று
வணங்கவம் பலத்துளாடும் வானவா நமச்சிவாய. 19

தண்டமிழ் முனிவன்றன்னைச் சமமுறத் தென்பாலேவும்
அண்டரோ யடன் மால்காணு ஆதியே நமச்சிவாய. 20

நஞ்சணி கண்டத்தானே நதிமதிச் சடையினானே
கொஞ்சுபச் சிலம்பெண்பாகங் கொண்டவா நமச்சிவாய. 21

பண்டுல களந்தமாலும் பங்கயத் தயனுந்தேடிக்
கொண்டுசென் றறியவொண்ணாக் குரவனே நமச்சிவாய. 22

மங்கையோர் பாகம்வைத்து வளர்பிறை முடிமேல்வைத்துச்
செங்கையின் மழுமான்வைத்த தேவனே நமச்சிவாய. 23

இயக்கரு முனிவர்தாமும் இருகரங் குவித்து நின்று
வியக்கவம் பலத்திலாடும் விமலனே நமச்சிவாய. 24

அரகர சிவனேயென்றும் அம்பலத் தாடியென்றும்
பரவுவார் துயரந்தீர்க்கும் பரமனே நமச்சிவாய. 25

இலவிதழ் மடவார்தங்கள் ஏவலுக் குரியனாகி
அலமரு மென்னையாண்ட அமலனே நமச்சிவாய. 26

சகல விதமான த்யான புஸ்தகங்கள்

சகாய விலையில் கிடைக்கும்:

ஸ்வாமி ஸச்சிதானந்த ஸரஸ்வதி

ஸ்ரீ சங்கர சாந்தி பீடம்

22, பிச்சு பிள்ளை சந்து,

மைலாப்பூர், சென்னை-4.

சந்திப்பு: காலை 7-முதல் 9-மணிவரை.

சந்தி விநாயக ரஹஸ்ய ரூ. 3.

ரூ1 செலுத்தி 8 நூதன புஸ்தகங்கள்

பெற்றுக்கொள்ளலாம்